
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 025 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 28 சனிக்கிழமை (13.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தமிழர்களுக்கு தீர்வு வழங்கினால் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினால் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவு வழங்கத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

15

## உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் கசிவு

### விவசாய விஞ்ஞான பாடத்தின் 2ஆம் வினாத்தாள் இரத்து

(கொழும்பு)

தற்போது நடைபெற்று வரும் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான இரண்டாம் வினாத்தாளை இரத்துச் செய்ய பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

15

# நிதிச்சிக்கல்களுக்கு தீர்வு காணுங்கள்

### ஜனாதிபதியிடம் சர்வதேச நாணய நிதியம்



(கொழும்பு)

நாட்டில் காணப்படும் நிதிச் சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வு காணுங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## தைப்பொங்கலன்று நுவரெலியா, பதுளையில் மதுச்சாலைக்கு பூட்டு

(கொழும்பு)

தைப்பொங்கல் தினத்தன்று (நாளை மறுதினம்) நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் மதுபானசாலைகளை மூடுவதற்கு மதுவரித் திணைக்

15

## சட்டநாதர் கோவில் பகுதியில் சடலம் ஒன்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் கோவில் பகுதியில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் நேற்று சட்ட வைத்

15

## எம்.பிக்கள் ஒத்துழைத்தால் சம்பளம் உயர்த்தப்படும்

### ஜனாதிபதி தெரிவித்ததாக சமூக வலைத்தளங்களில் சர்ச்சை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் தனக்கு ஒத்துழைப்பு வழங்கினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக அவருடைய புகைப்படத்துடன் கூடிய பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவளித்தால் அவர்

15

## ஜனாதிபதி நிதி ஒழுக்கத்தை முதலில் கடைப்பிடிக்க வேண்டும்

### ஜே.வி.பி தலைவர் அநுர குமார



(கொழும்பு)

ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கு 2000 இலட்சம் ரூபாவை மேலதிகமாக ஒதுக்குவதன் காரணம் என்ன? நிதி ஒழுக்கத்தை பற்றி பேசும் ஜனாதிபதி முதலில் நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

அரசியல்வாதிகள் சுகபோகமாக வாழ்வதற்காகவேவரி அறவிடப்

02



## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக

### உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என உத்தரவிடக்கோரி தேசிய மக்கள் சக்தியினால் உயர்நீதிமன்றில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15

## ஜப்பானிய நிதியமைச்சருடன் சஜித் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானிய நிதியமைச்சர் உள்ளிட்ட ஜப்பானிய தூதுக்குழு பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைவர் தெரிவுக்கு வாக்களிப்பதே சிறந்தது சுமந்திரன் எம்.பி

(திருகோணமலை)

கட்சித் தலைவரை தெரிவு செய்ய வாக்களிப்பது சிறந்தது என இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பில் இரா சம்பந்தனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு தீர்வை வழங்குவோம் என ஊடகங்களில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் மீண்டும் கட்சி உறுப்பினர்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென கூறியமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியில் இணக்கப்பாடு தொடர்பில் பரிசீலனை செய்த போது சாத்தியப்படாது என தீர்மானித்ததற்கு அமைய நான் எதிர்பார்த்தபடி ஜனநாயக ரீதியாக வாக்களிப்பதே சிறந்தது எனவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் கட்சி ஆதரவாளர்களை இரகசியமான முறையில் சந்திப்பதாக சிலர் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இது குறித்து கேட்டபோது திருகோணமலைக்கு வழக்கு ஒன்றிற்கு வந்தபோது அண்ணாமலை மாவட்ட கட்சி ஆதரவாளர்களை சந்தித்து பேசியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நான் தலைவராக வருவேன் என யாராலும் எதிர்வு கூற முடியாது. எதிர்வரும் 27ஆம் திகதி தலைவராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் கட்சியை கட்டுக்கோப்பாகவும் கட்சி மூலமாக தமிழ் மக்களுடைய அரசியல் உரிமைகளை வென்றெடுக்கின்ற பணிகளை தொடர்ச்சியாக செய்வேன் எனவும் அவர் கூறினார்.

(ம-7)

## ஜனாதிபதி...

படுகிறது. நாமல் ராஜபக்ஷக்கு எவ்வாறு அரச இல்லத்தை வழங்க முடியும்.

ராஜபக்ஷர்கள் இன்றும் அரச இல்லங்களில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வெட்கம் என்பதொன்று இல்லையா என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க கடுமையாக சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாராளுமன்றத்துக்கு குறை நிரப்பு பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, நிதி ஒழுக்கம் பற்றி அரசாங்கம் பாடம் கற்பிக்கிறது.

இவர்களின் நிதி ஒழுக்கத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரச முயற்சியாண்மை திணைக்களத்துக்கு 13 ஆயிரம் இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 13 ஆயிரம் இலட்சம் ரூபா எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பதை பாராளுமன்றத்துக்கு அறிவியுங்கள். இதில் நிதி ஒழுக்கம் உள்ளதா?

இந்த குறை நிரப்பு பிரேரணையில் ஜனாதிபதியின் மேலதிக செலவுகளுக்காக 2000 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள், எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட மானியத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 2000 இலட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

வரவு-செலவு திட்டத்தின் போது ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள், எரிபொருள் மற்றும் வாகனங்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கான செலவினங்கள் நாட்டுக்கு பாரிய சுமை என்பதை பலமுறை குறிப்பிட்டுள்ளோம். இதற்கு மேலதிகமாக 2000 இலட்சம் ரூபாவை ஒதுக்க குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலில் ஜனாதிபதி நிதி ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றுள்ளது.

(ம-7)


# காணவில்லை

தருமன் கலட்டி,
தெல்லிப்பளையைச் சேர்ந்த

**சோமசுந்தரம் உதயகுமார்**

(வயது 50)
(உளநலம் பாதிக்கப்பட்டவர்)
இவரை 20.11.2023 இல்
இருந்து காணவில்லை.



(18612)

**தொடர்பு : 075 408 4527**

# வேலைவாய்ப்பு

Romania நாட்டில் Delivery Boy மற்றும்
தொழிற்சாலை வேலைவாய்ப்புகள் உள்ளன.
கனடாவிற்குமான Tourist விசா
தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**Hybrid International Hub(pvt)ltd Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)
**021 222 1265, 076 250 0098**

(C-8125)


# மரண அறிவித்தல்



மண்ணில்
08 - 03 - 1947

விண்ணில்
12 - 01 - 2024

## திருமதி நாகேஸ்வரி சின்னத்தம்பி

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி சின்னத்தம்பி அவர்கள் நேற்று (12.01.2024) வெள்ளிக்கிழமை அன்று அளவெட்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு-கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் குலேந்திரன், தனலட்சுமி (கனடா), விஜயலட்சுமி (இலண்டன்), யோகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மகேந்திரன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்புமனைவியும் Dr.சிவகௌரி (அவுஸ்ரேலியா), வாசுகி (ஆசிரியர் - யா/வட இந்து மகளிர் கல்லூரி), சண்முகப்பிரியா (மனிதவள திட்டமிடலாளர், கீதுறு சர்வதேச விமான நிலையம், இலண்டன்), Dr.தயாநிதி (அவுஸ்ரேலியா), கிருஷ்ணலீலா (உதவிமுகாமையாளர், சிங்கப்பூர், தேசிய பல்கலைக்கழகம்), Dr.கஜேந்திரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவகுமார் (அவுஸ்ரேலியா), அரவிந்தன், லக்ஸ்மன் (இலண்டன்), முகுந்தன் (அவுஸ்ரேலியா), கோபிநாத் (சிங்கப்பூர்), வித்தியா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் சுருதி, சங்கவி, ஹர்சன், அபிலாஷினி, வைஷ்ணவி, வைஷாலி, கவிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மயிலோடை அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
077 922 8947

(C-8124)

# மரண அறிவித்தல்



பிறப்பு
08 - 03 - 1936

இறப்பு
12 - 01 - 2024

## சவுந்தரநாயகி குலசிங்கம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவுந்தரநாயகி குலசிங்கம் அவர்கள் நேற்று (12.01.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா தையல்நாயகி, சரவணமுத்து வள்ளிநாயகி, செல்லத்துரை சபாபதிப்பிள்ளை (மிருகவைத்தியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம், முருகேசு பத்மநாதன், முருகேசு திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற முருகேசு குலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் குலசிங்கம் சோமராஜ் அவர்களின் பாசமிகு தாயாரும் ஜெயந்தா அவர்களின் பாசமிகு மாமியும் நிலோத்தமனின் (துளசி) அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மணியகாரன் வீதி,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சோமராஜ் (கண்ணன்)
மகன் 077 374 7828

(C-8128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களால் ஒரு வருடத்தில் சுமார் ஒரு லட்சம் உயிரிழப்புகள்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

**தொற்றாத நோய்களால் வருடாந்தம் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் பேர் உயிரிழப்பதாக தேசிய தொற்றா நோய்களுக்கான சபையில் தெரியவந்துள்ளது.**

இந்த நோய்களில் புகையிலை பயன்பாடு, ஆரோக்கியமற்ற மதுபான பயன்பாடு, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் அதிக கொழுப்பு அளவு ஆகியவை அடங்கும்.

இந்நிலைமையை தவிர்க்கும் வகையில், பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் மட்டுமன்றி ஏனைய சிற்றுண்டிச்சாலைகளிலும் ஆரோக்கியமான உணவுகளை விற்பனை செய்வதற்கும் பாடசாலை மாணவர்களை உடல் செயற்பாடுகளுக்கு வழிநடத்துவதற்கும் முறைமை ஒன்றை தயாரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் கடந்த புதன்கிழமை சுகாதார அமைச்சில் நடைபெற்ற தொற்றா நோய்கள் தொடர்பான தேசிய சபையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. (நி-5-6)

## மகிந்தவை நேரில் சந்தித்த புதிய இந்தியத் தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரில் சென்று சந்தித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகரகாரியவசம் எம்.பியும் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மருந்துப் பொருட்களின் விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் மருந்துப் பொருட்களின் விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்துப் பொருட்களின் விற்பனை தற்போது சுமார் 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சந்திக்க சான்கந்த தெரிவித்துள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் மிகவும் அத்தியாவசியமான மருந்து வகைகளை மட்டுமே கொள்வனவு செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நோயளிகள் நாள்தோறும் பெற்றுக் கொள்ள வேண்டிய மருந்து வகைகளை இடைக்கிடை பெற்றுக் கொள்கின்றனர்.

மருத்துவர்கள் வழங்கும் பரிந்துரைகளுக்கு அமைய மருந்து மாத்திரைகளை பெற்றுக்கொள்ளாதிருப்பது நோயாளிகளுக்கு மரணத்தை கூட ஏற்படுத்தலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று வேளை உணவு உட்கொள்ள முடியாதவர்களினால் மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

# அரசாங்கத்திற்கு எதிராக வெடிக்கவுள்ள போராட்டம்

## சஜித் தரப்பு திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை எதிர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதேவேளை குறித்த போராட்டத்தில் மக்களை வீதிக்கு இறக்குவோம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வற் வரி அதிகரிப்பால் நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார். வெளியில் சென்று பார்த்தால் அவருக்கு நடப்பது என்ன என்று தெரியும்.

வற் வரிகளை அதிகரிக்க முன்னர் ஆய்வுகளை செய்தே அதனை முன்னெடுக்க வேண்டும். ஆனால் அப்படி செய்ய வில்லை.

இந்நிலையில், மக்கள் நாளாந்தம் உணவுக்காக [illegible] பெறும் நிலைக்கு தள்ளப்பட்டு



ள்ளதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

22 மில்லியன் மக்களில் 11 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குள் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆட்சியாளர்களோ மக்களின் பிரச்சினைகள் எதுவும் தெரியாததை போன்று இருக்கின்றனர் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## செய்தித்துளிகள்

### பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்ற நயன வாசலதிலக



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நயன வாசல திலக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமிந்த விஜேசிறி பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நயன வாசல திலக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

### நியூசிலாந்தில் உயிரிழந்த இலங்கை இளைஞன்

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் நீரில் மூழ்கி இலங்கை இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஹிரன் ஜோசப் என்ற 19 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

நியூசிலாந்தின் ஒக்லாந்தில் உள்ள கரியோடாஹி கடற்கரையில் நண்பர்கள் குழுவுடன் நீராடும்போது நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

அலைகள் காரணமாக காணாமல் போன அவரது சடலம் சுமார் 5 நாட்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

### 24 மணித்தியாலத்தில் 863 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 24 மணித்தியாலத்தில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய நடவடிக்கையின்போது 863 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதானவர்களில் 24 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் போதைக்கு அடிமையான 19 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6)

### பேருந்துகளில் சி.சி.ரி.வி

(கொழும்பு)

வன்முறை மற்றும் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் அனைத்து பேருந்துகளிலும் சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்தப்பட உள்ள தாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹசரங்க சுழலில் மாயாஜாலம் தொடரை வென்றது இலங்கை

சிம்பாவே மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்று தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது.

ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 22.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 96 ஓட்டங்களை குவித்தது.

அவ்வணி சார்பாக ஜாய்லார்ட் கும்பே 29 ஓட்டங்களையும் தகுத்ஸ்வனாஷே கைதானோ 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வனிந்து ஹசரங்க 6 ஓவர்கள் வீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதுவே சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வனிந்து ஹசரங்கவின் மிகச்சிறந்த பந்துவீச்சு பிரதியாக இது பதிவு செய்யப்பட்டது.

இதேநேரம் மகேஷ் தீக்ஷன 5 ஓவர்கள் வீசி 15 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 1 விக்கெட்டினையும் ஜனித் லியனகே மற்றும் டில்ஷான் மதுஷங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.




இதனை அடுத்து27 ஓவர்களில் 97 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

இலங்கை அணி சார்பாக குஷால் மெண்டிஸ் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மசகட்சா மற்றும் ங்காரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சிம்பாவே அணியின் 7 விக்கெட்களை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். (நி-5-6)

## ஆப்கானை வீழ்த்திய இந்தியா



இந்தியா - ஆப்கானிஸ்தான் இடையிலான முதல் இருபது-20 போட்டி மொகாலியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் பட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் 5விக்கெட் இழப்பிற்கு 158 ரன்கள் எடுத்தது.

பின்னர் 159 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ரோகித் சர்மா- சுப்மன் கில் ஜோடி களம் இறங்கியது. ஆட்டத்தின் 2 ஆவது பந்திலே ரோகித் சர்மா ரன்அவுட்டாகி வெளியேற அடுத்து திலக் வர்மா களம் இறங்கினார்.

சுப்மன்கில் 12 பந்தில் 23 ரன்கள் எடுத்து வெளியேறினார். திலக் வர்மா 22 பந்தில் 26ரன்கள் சேர்த்தார். ஷிபம் டுபே ஒரு பக்கம்நிலைத்து நின்று விளையாட மறுமுனையில் ஜிதேஷ் சர்மா 20 பந்தில் 31 ரன்கள் எடுத்துஆட்டமிழந்தார்.

5 ஆவது விக்கெட்டுக்கு டுபே உடன் ரிங்கு சிங் ஜோடி சேர்ந்தார். இந்தியாவுக்கு கடைசி 4ஓவரில் 19 ரன்கள் தேவைப்பட்டது. ஷிவம் டுபே38 பந்தில் 4 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் அரை சதம் அடித்தார்.

18 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தை சிக்ஸருக்கும், 3 ஆவது பந்தை பவுண்டரிக்கும் ஷிவம் டுவே விரட்ட இந்தியா 17.3 ஓவரில் இலக்கை எட்டி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. (நி-5-6)

## பிரேசில் நாட்டின் கால்பந்து ஜாம்பவான் மரியோ சகால்லோ மரணம்


பிரேசில் நாட்டை சேர்ந்த கால்பந்து ஜாம்பவான் மரியோ சகால்லோ தனது 92 வயதில் காலமானார்.

பிரேசில் அணியின் வீரராக இரண்டு முறையும் அணியின் பயிற்சியாளராக இரண்டு முறையும் அணி கால்பந்து உலக கோப்பையை வெல்வதற்காகவும் மரியோ சகால்லோ முக்கிய பங்காற்றினார்.

கடந்த 1958 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் நடந்த உலக கோப்பை தொடர்களில் பிரேசில் அணியின் மற்றொரு ஜாம்பவானான பீலே உடன் இணைந்து விளையாடி அணிக்கு கோப்பையை வென்று கொடுத்து அதேவேளை 1970 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் உலக கோப்பையை வென்ற பிரேசில் அணியின் பயிற்சியாளராக இவர் செயற்பட்டார்.

இந்நிலையில், சமீபத்தில் உடல்நிலை குறைவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மரியோ சகால்லோ அண்மையில் காலமானார்.

இவரது மறைவிற்கு பிரேசில் நாட்டில் 3 நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படும் என அந்நாட்டின் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா அறிவித்துள்ளார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தேர்தல்களில் எமக்கே வெற்றி

## அடித்துக் கூறும் மொட்டுக்கட்சி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே அடுத்த தேர்தல்களில் வெற்றி நடைபோடும் என அக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித்தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார். எனினும், வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

வெற்றி வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார். இந்த விடயத்தில் கட்சி எடுக்கும் முடிவுக்கு நான் கட்டுப்படுவேன்.

அடுத்த பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் அமையும் கூட்டணியே வெற்றிபெறும்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கை இடம்பெறுகின்றது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# செங்கடல் நெருக்கடி விவகாரம்; கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படலாம்

## இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்ரேல்-காசா மோதலால் செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கோதுமை மாவின் விலை எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.


இலங்கைக்கு துருக்கியில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை துருக்கியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா செங்கடல் வழியாக செல்லும் கப்பல்களில் இருந்து வருகிறது.

அதன்படி, அந்த கப்பல்கள் செங்கடல் வழியாக பயணிக்க தடைகள் இருப்பதால், கூடுதல் கப்பல் கட்டணம் வசூலித்தால், கோதுமை மாவின் விலை உயரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாட்டில் இன்னும் 3 மாதங்களுக்கு போதுமான கோதுமை மா மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சோள கையிருப்பு இருப்பதாக அத்தியாவசிய இறக்குமதியாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கோதுமை மாவுக்கான விலையினை அதிகரிக்கப் போவதில்லை என இலங்கையின் மாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# எனது 33 ஆம் ஆண்டு ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

**என் அன்பான உள்ளங்களே!**

உலக நாடுகள் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சிகள் மூலம் செயற்கைச் சூரியனை உருவாக்குவதில் போட்டி போடும் இக் காலகட்டத்திலே... எங்கள் இயற்கைச் சூரியனின் திருநாளாம் தைப்பொங்கல் தின எனது இனிய பொங்கல் வாழ்த்துக்களை ஈசுர விநாயகரின் அருளாசியுடன் தெரிவிக்கின்றேன்.

மேலும் பண்டைத் தமிழர் பண்பாடு, கலை, கலாசாரம் பேணப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் உழவர் திருநாளாகவும் இவ் விழா கொண்டாப்படுகின்றது. உலக இயக்கத்திற்கு முக்கிய காரணமாக கண்கண்ட தெய்வமாக, இயற்கைத் தெய்வமாக விளங்கும் சூரிய பகவானுக்கு இல்லங்கள் தோறும் புதிய மண்பானையில் புத்தரிசி கொண்டு பொங்கிப் படைத்து பூசை வழிபாடுகள் செய்து நன்றிக்கடன் செலுத்தும் விசேட தமிழர் தினமாகும்.

பொங்கிப் படைப்பதன் நோக்கம்: தெய்வங்கள், தேவர்கள்,பிதிர்களை பிரீதிப்படுத்துவதற்காக போற்றி வழிபடுதலாகும். அவ்வேளையிலே படைத்தவற்றை யாவரும் பகிர்ந்துண்ணும் போது அவை பிரசாதமாக மாற்றம் பெற்று அனைவருக்கும் தெய்வ ஆசி கிடைத்துவிடும். இத்துடன் ஈசுர விநாயகரின் சூத்திரத்திலே உள்ள விடயங்களைச் சற்று சிந்திப்போம்.

காரணம் இல்லாமல் காரியம் எதுவும் நடக்க முடியாது. அண்மைக் காலமாக அறிஞர்கள்,கல்விமான்கள்,பெரியோர்கள் எனப்பலரும் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் கடந்து விட்டதே தென்னிலங்கையில் இருந்து வருகிறார்கள் போகிறார்கள் ஆனால் எதுவும் நடக்கவில்லையே என்ற மனச்சோர்வு உணர்வையும் அவர்களின் ஆதங்கத்தையும் பத்திரிகை மூலமாக வெளிப்படுத்தியதை என்னால் உணரமுடிகின்றது.

14 ஆண்டுகள் என்றதும் எமது புராண இதிகாச வரலாறுகளைப் புரட்டுங்கள்.

01. இராமாயணத்தைப் பாருங்கள்... அங்கே இராமர் 14 ஆண்டுகள் வனவாசம் அனுபவித்தார்.

02. மகாபாரதத்தைப் பாருங்கள்... அங்கே பஞ்ச பாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசம் 2 ஆண்டுகள் ஆஞ்ஞாதவாசம் அனுபவித்தார்கள். இவை கடந்த கால நிகழ்வுகள்.

இவற்றை நாம் சிந்தித்துப் பார்க்கும் போது 14 ஆண்டுகள் தமிழ் மக்கள் ஈசுர விநாயகரின் திருவாக்குகளை உணரத் தவறிய காரணத்தினாலே ஈசுர விநாயகரின் சாபத்திற்கு ஆளாகிவிட்டனர். இன்னும் 30 வருட யுத்தத்தில் நடந்தவற்றை திரும்பிப் பார்ப்போமேயானால் சொல்லவும் வேண்டுமா? சொல்லியும் முடியுமா? இவை எங்கள் நிகழ்கால நிகழ்வுகள்.

சிறீலங்கா பூமியில் நடந்த இலட்சோப இலட்சம் மனிதக் கொலைகள், இதனால் ஏற்பட்ட பிதிர்தோஷங்கள், மனித சாபங்கள், பிரம்மகத்தி தோஷங்கள் இவ்வாறு கொடிய பாப கர்மாக்கள் யாவும் கூட்டுச் சேர்ந்து எம்மை இப் பூமியில் நிம்மதியாக வாழ முடியாமல் செய்கின்றன. தோஷங்களிலே பிரம்மகத்தி தோஷம் மிகவும் கொடியது என புராணங்கள் கூறுகின்றன. இப் பிரம்மகத்தி தோஷம் மக்களை காடு மேடுயாவும் ஓடித்திரிய வைக்கும், மனிதனை நிம்மதியாக உறங்க விடாது, மன அமைதி வரவிடாது. புராணங்களில் பரம்பொருளான சிவனையே இத் தோஷம் தீண்டியதாகவும் கதைகள் உண்டு. தமிழரின் இக்கொடிய கர்மாக்களைப் போக்கத்தான் ஈசுர விநாயகரின் கும்பாபிஷேக தினத்திலே விஷேட யாக பூஜைகள் செய்யப்பட்டன. எனவே இக் கொடிய தோஷத்தை சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகனே நீக்கியருளி பாவ, தோஷ, சாப விமோசனம் தந்து எம்மைக் காப்பாற்றி அருள்வார்.

எனவே தமிழர் திருநாளாம் தைப்பொங்கலன்று தமிழ் மக்களைப் பீடித்துள்ள பாவ, கர்ம ,தோஷங்கள் நீங்கி, புதுயுகம் மலர்ந்திட தமிழர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பொங்கிப் படைத்து பலன் பெறுவோமாக!

**“எழுந்திடும் நினைவில் எல்லாம் நிறைந்தவன் -இறைவனம்மா**
**எழுதிடும் எழுத்திலெல்லாம் கலந்தவன் - கடவுளம்மா”**

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீக வாதியும் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)**

(18610)

# இராசிபலன்

**13.01.2024**
**மார்கழி 28, சனிக்கிழமை**
**துதியை பிற்பகல் 2.43 மணிவரை**

**திருவோணம் பிற்பகல் 4.20 மணிவரை**
**சுபநேரம் 3.33-5.03 மணிவரை**
**இராகுகாலம் 9.33-11.03 மணிவரை**

**சந்திராஷ்டமம்- திருவாதிரை, புனர்பூசம்.**

**வளவன்**


மேஷம்
பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


கடகம்
நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.


துலாம்
கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும்.


மகரம்
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்
அரைகுறையாக இருந்த காரியங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


சிம்மம்
மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்
சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.


கும்பம்
சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்.


மிதுனம்
உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கலாம், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.


கன்னி
மனநிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.


தனுசு
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மீனம்
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

**போலியான நண்பனை விட உண்மையான எதிரியே மேலானவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்ம மலக்கழிவகற்றும் பவுசர்கள் ஜீ.பி.எஸ் தொழில் நுட்பத்தால் கண்காணிப்பு

## ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு



(யாழ்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கழிவுகள் மற்றும் மலக்கழிவகற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ் தொழிநுட்பத்தினூடாக கண்காணிக்குமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

யாழில், கழிவுகள் மற்றும் மலக்கழிவுகள் உரியவாறு அப்புறப்படுத்தாமையால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த செயற்பாடுகள் சீராக அகற்றப்படாததால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இந்த விடயங்களை கேட்டறிந்து கொண்ட ஆளுநர் மலக்கழிவு மற்றும் பவுசர்களை ஜீ.பி.எஸ். தொழிநுட்பத்தினூடாக கண்காணித்தல். மலக்கழிவு அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் மாகாண சுகாதார அமைச்சில் பதிவு செய்தல், இந்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் பவுசர்களில் நிறுவனத்தின் பெயர், பதிவு விபரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும், இவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் அறிவிக்க வேண்டும். குறித்த பவுசர்களை போக்கு வரத்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கண்காணிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு பணிப்புரைவிடுத்தார். (நி-5-6-33)

# தொலைபேசி அழைப்பால் பறிபோன ரூ.18 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தினால் நடத்தப்பட்ட பண பரிசு குலுக்கலில், கிடைக்கப்பெற்ற பெருந்தொகை பணத்தை பெற்றுக்கொள்ள 18 இலட்ச ரூபாய் வரி கட்ட வேண்டும். அந்த பணத்தை உடனே வைப்பிலிடுங்கள் என கூறி , 18 இலட்ச ரூபாயை மோசடி செய்த குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. யாழைச் சேர்ந்த நபர் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் , தன்னை தனியார் தொலைத் தொடர்பு நிலையமொன்றின் பிரதிநிதி எனக் கூறி , தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரிசு குலுக்கலில் உங்களுக்கு பெருந்தொகை பணம் விழுந்துள்ளது.

அந்தப் பணத் தினை பெற வரியாக 18 இலட்ச ரூபாயை செலுத்தி பணப்பரிசை பெற முடியும் எனக் கூறி, கணக்கிலக்கம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

அதனை நம்பிய நபர் குறித்த கணக்கு இலக்கத்திற்கு 18 இலட்ச ரூபாய் பணத்தினை வைப்பிலிட்டுள்ளார்.

அதன் பின்னர் தன்னுடன் தொடர்பு கொண்ட இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்த முயன்ற போது , அந்த இலக்கம் செயலிழந்து காணப்பட்டது.

அதனை அடுத்து குறித்த தனியார் தொலைத் தொடர்பு நிலையத்திற்கு சென்று , விசாரித்த போதே , தான் ஏமாற்றப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த நிலையில் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தென்னிலங்கையை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தொடர் விசாரணைகளின் அடிப்படையில், கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான மற்றுமொரு நபரை, மோசடிக்கு துணை போன குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். (நி-5-6)

# எழுதுமட்டுவாழில் இளைஞனை கட்டிவைத்து வாள்வெட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இளைஞன் ஒருவரை கட்டி வைத்து வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் இளைஞன் படுகாய மடைந்துள்ளார்.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன் எழுதுமட்டுவாழ் பகுதியில் திருமணம் முடித்து வசித்து வந்த நிலையில் இனந்தெரி யாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடை ந்திருந்த இளைஞனை மீட்ட உறவினர்கள் அவரை சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதித்துள்ள நிலையில் இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.


வாள் வெட்டுச் சம்பவத்தை தொடர்ந்து எழுதுமட்டுவாழ் பகுதியில் பதற்றமான நிலைமை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3015


### வித்தகன்





### தர்மினா




### விதுர்சிகா




### பவித்தா




### லத்திகா




### மிதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றும் இலங்கை அரசு

(கொழும்பு)

**பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் மக்களின் உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்தெரிவித்துள்ளது.**



அரசாங்கத்தின் ஒடுக்குமுறை கொள்கைகளும் பலவீனமான சமூகப் பாதுகாப்பும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மோசமான விளைவுகளால் பலர் ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் உலக அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்கா ணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை ஒடுக்கிவருகின்றது. சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான பாரபட்ச கொள்கைகளை அரசாங்கம் தொடர்ந்தும் பின்பற்றுகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

மில்லியன் கணக்கானவர்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக போராடுகின்றனர் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் மீனாக்சிகங்குலி இதற்கு ஊழலும் பொறுப்புக்கூறாத ஆட்சியும் காரணம் என தெரிவித்துள்ளார்.

வறியநிலையில் உள்ளவர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் தற்போதைய அரசாங்கம் பதில் நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதேவேளை பொறுப்புக்கூறல் ஜனநாயக அடிப்படையிலான தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான குரல்களை தற்போதைய அரசாங்கம் ஒடுக்குகின்றது .

இலங்கை அரசாங்கத்தினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பொருளாதார நெருக்கடிக்கான பதில் நடவடிக்கைகள் மனித உரிமைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

17 வீதமான மக்கள் ஒரளவு அல்லது கடும் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர் நோக்கும் நிலை இலங்கையில் காணப்படுகின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குடும்பத்தவர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அரசா ங்கத்தின் கண்காணிப்பினை மிரட்டல்களை தொடர்ந்தும் எதிர்நோக்குகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நால்வர் யாழில் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் மற்றும் அவருக்கு கசிப்பு விநியோகம் செய்து வந்த பெண் உள்ளிட்ட நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 19 லீற்றர் கசிப்பினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

# கெஹலியவை கைது செய்யாததால் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு படையெடுத்த எம்.பிகள்

(கொழும்பு)

கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

காவிந்த ஜயவர்தன, இந்துனில் திஸாநாயக்க, முஜிபர் ரஹ்மான் மற்றும் வசந்த பண்டார உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முஜிபர் ரஹ்மான்,

மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் மனித இம்யூனோகுளோபுலின் என்ற சர்ச்சைக்குரிய மருந்தை இறக்குமதி செய்ததன் பின்னணியில் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளார்.

இதுவரையில் அவரை கைது செய்யாமை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# சீமெந்துடன் சென்ற லொறி வெள்ளத்தில் சிக்கியது

## 600 சீமெந்து மூடைகள் நாசம்



(திருமலை)

திருகோணமலையில் இருந்து சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வாழைச்சேனை பகுதியில் வெள்ளத்தில் சிக்கியதில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் லொறியில் ஏற்றிச்செல்லப்பட்ட 600 சீமெந்து மூடைகளும் நாசமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் வாழைச்சேனையில் மாவு ஏற்றிச் சென்ற லொறியொன்றும் வெள்ளத்தில் சிக்கியதில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியில் உள்ள மாவினை மற்றுமொரு லொறிக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் இடம் பெற்றுவருவதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பல பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)


# நீ ஒரு பல்கலைக்கழகம்

கட்டுருவாக்கம் போற்பல கட்டுரையாளன்
கவின் வகுப்பறையில் கல்வியியலாளன்
கணிதத்தின் ஆசான் பகையும் கைவணங்கும்,

கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம்



குருசேத்திரத்தில் பார்த்திபன் போன்றாய்
குருதீபத்தால் பலர் திறன் வெளிக்கொணர்ந்தாய்
கொரோனா காலத்தில் சமூக ஜோதியாய்,
கோட்டையை ஈந்து கூடாரம்(பவிலியன்) சென்றாய்.

பங்கேற்பு தலைமைத்துவம் எனும் பாங்கும்,
படைப்பாற்றல் புதுமைகள் செயலினில் ஓங்கும்.
அறுபதை எட்டிய அகவையும் ஏங்கும்
அழகினால் கனவினில் பலர்விழி தேங்கும்.

மாற்றமே மாறாது எனும் கொள்கையாளன்
மாலதி மூமைந்தர் மகிழ் குடும்பஸ்தன்.
பல்துறை ஆற்றலால்-நீ ஒரு பாடம்.
பல்கலைக்கழகம் நீ பல்லாண்டு வாழி!


Best Wishes

அன்புடன் நண்பன்
ஞானமணி இரத்தினசிங்கம் குடும்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# பூமியைத் தாக்கவுள்ள சூரியப்புயல் - நாசா



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா, மற்றும் சர்வதேச கடல் மற்றும் வளிமண்டல ஆய்வகத்தின் சமீபத்திய தரவுகளின் படி விரைவில் சூரியப் புயல் பூமியைத் தாக்கும் அபாயம் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சூரியனின் செயற்பாடுகளைத் தொடர்ந்து அவதானித்து அதன் தரவுகள் மூலம் சூரியப் புயல் உருவாவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக சர்வதேச கடல் மற்றும் வளிமண்டல ஆய்வகம் தெரிவித்துள்ளது. சூரியனில் மூன்று புள்ளிக் குழுக்கள் சூரியப் புயலை ஏற்படுத்தும் வலிமையோடு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3536, 3539, 3540 எனக் குறிப்பிடப்படும் மூன்று சூரியப் புள்ளிகளும் சீரற்ற பீட்டா மற்றும் காமா காந்தப் புலங்களைக் கொண்டுள்ளன.

இந்த புள்ளிகள் எம்(M) வகையிலான மிதமான சூரியப் புயலை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு 45% உள்ளதாகவும் 10% எக்ஸ்(X) வகையிலான வலிமையான சூரியப் புயலை ஏற்படுத்தக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்த வகையிலான சூரியப்புயல்களால் பூமியில் தொலைத்தொடர்பு மற்றும் மின்சேமிப்பு சாதனங்கள் வெகுவாக பாதிக்கப்படும் சாத்தியம் உள்ளது.

தொலைத்தொடர்பு, இணைய சேவைகள் மாதக்கணக்கில் தடைப்படலாம் என விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் ஆராய்ச்சியாளர்களும் எச்சரித்துள்ளனர்.

சூரியனிலிருந்து பிளாஸ்மா மற்றும் காந்தப்புலங்கள் பெரிய அளவில் பூமியைத் தாக்கும் நிலையில் புவிகாந்தப் புயல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியின் காந்தப்புலத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி சூரியன் வலிமை வாய்ந்த கதிர்களை வெளியேற்றியதாக நாசா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# காசாவில் இட

# இனப்படு

(பிரிட்டோரியா)

**காசாவில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் செயற்பாடுகள் மற்றும் புறக்கணிப்புகள், இனப்படுகொலைத்தன்மை கொண்டவை என இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா தொடுத்திருந்த இனப்படுகொலை வழக்கில் தென்னாபிரிக்கா வாதிட்டுள்ளது.**

இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா தொடுத்துள்ள இனப்படுகொலை வழக்கின் முதல்நாள் விசாரணைகளை சர்வதேச நீதி மன்றம் நேற்று ஆரம்பித்துள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கைகள், பாலஸ்தீன தேசிய, இன மற்றும் இனக் குழுவின் கணிசமான பகுதியை அழிப்பதை நோக்கமாக கொண்டவை என தென்னாபிரிக்கா வாதிட்டுள்ளது.

இஸ்ரேலின் செயல்களில் காசாவில் பாலஸ்தீனியர்களைக் கொல்வது, அவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக கடுமையான தீங்கு விளைவிப்பது மற்றும் உடல் அழிவை ஏற்படுத்தும் வாழ்க்கை நிலைமைகளை அவர்கள் மீது சுமத்துவது உள்ளிட்டவற்றை ஆதாரங்களாக தென்னாபிரிக்கா முன்வைத்துள்ளது.

காசாவில் உள்ள அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும்




# ரஷ்யாவுடனான போர் நிறுத்தத்தை நிராகரித்தார் உக்ரைன் ஜனாதிபதி



(கீவ்)

ரஷ்யாவுடனான போர் நிறுத்தத்தை உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி நிராகரித்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு முழு அளவில் படையெடுத்தது. உக்ரைனை பிடிக்கும் வரையில் போர் ஓயாது என ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்தார். என்றபோதிலும் ரஷ்யாவால் உக்ரைனை முழுமையாக ஆக்கிரமிக்க முடியவில்லை. பிடித்து வைத்திருந்த சில இடங்களை உக்ரைன் மீட்டது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் உக்ரைன் சண்டையிட்டு வருகிறது. இதனால் ரஷ்யா மிகப் பெரிய அளவில் இழப்பை சந்தித்து வருகிறது. இந்த நிலையில்தான் போர் நிறுத்தம் என்பதை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நிராகரித்துள்ளார். உக்ரைன் மீதான சண்டையின் நிறுத்தம், போர் நிறுத்தம் என்று அர்த்தமாகிவிடாது. அது ரஷ்யா மீண்டும் ஆயுதங்களையும், வீரர்களையும் கட்டமைக்க உதவுவதாக இருக்கும். அடக்குமுறை தோற்கடிக்கப்பட வேண்டும். அடக்குமுறையாளர் தோல்வியாளராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-5-6)

### டிசெம்பரில் மட்டும்

# கொரோனாவால் 10,000 பேர் பலி

(ஜெனிவா)

கொரோனா பாதிப்பால் கடந்த டிசெம்பர் மாதம் மட்டும் உலகம் முழுவதும் 10,000 பேர் உயிரிழந்ததாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பொது இயக்குநர் டெட்ரோஸ் அதானாம் கூறுகையில், புதிய வகை கொரோனா பரவலால் கடந்த மாதத்தில் மட்டும் 10,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவின் தீவிர பரவல் காலத்திலான சராசரி மரணங்களை விட இது குறைவாக இருந்தாலும் தற்போதைய சூழலில் இத்தனை பேர் உயிரிழந்திருப்பது ஏற்புடையது அல்ல எனத் தெரிவித்தார். (நி-5-6)

# ஹ
# ப

(சன
ஏம
இலக்
ஒன்றி
குறி
மேற்
செய்தி
அவ
நெதர்
பிரித்தா
மற்று
தாக்குத
இந்
யான
சியாளர்
அ
வர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டம்பெறுவது கொலையே!

## வாதிட்ட தென்னாபிரிக்கா




இஸ்ரேல் நிறுத்துவது உட்பட "தற்காலிக நடவடிக்கைகள்" நீதிமன்றத்தால் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் தென்னாபிரிக்கா தனது வழக்கில் வலியுறுத்தியுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் கொடூரமானவை மற்றும் அபத்தமானவை என இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாம் எதிர்கொள்வோம் எனவும் மனிதாபிமான சட்டத்தின் கீழ் தற்காப்பை பயன்படுத்துவதற்கான விடயங்களை முன்வைப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தென்னாபிரிக்கா தொடுத்துள்ள வழக்கிற்கு எதிராக அறிக்கைகளை வெளியிடுமாறு வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களை பிரயோகிக்குமாறு அந்தந்த நாடுகளில் உள்ள தமது நாட்டு தூதரகங்களுக்கு இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவின் கோரிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்குமாறு உலக நாடுகளின் தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்புமாறு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் இஸ்ரேல் தூதுவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலின் தாக்குதல்களில் மீண்டும் அதிகமான சிறுவர்கள் உயிரிழந்த துன்பியல் சம்பவம் பதிவாகியுள்ளது.

ரஃபா நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 சிறுவர்கள் உட்பட 12 பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளதாக ஹமாஸினால் இயக்கப்படும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)



# அமெரிக்க கப்பலை கைப்பற்றிய ஈரான்

## வளைகுடாவில் பதற்றம்



(மஸ்கட்)

ஓமான் நாட்டின் கடலில் சென்று கொண்டிருந்த அமெரிக்காவுக்கு சொந்தமான "செயின்ட் நிக்கோலஸ" என்ற கப்பலை ஈரான் கடற்படை நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்துள்ளது.

இது குறித்து ஈரான் இராணுவம் வெளியிட்டுள்ள செய்தியில், "சூயஸ் ராஜன" என்ற பெயரிடப்பட்ட சரக்கு கப்பல் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்க வழிகாட்டுதலின் கீழ் ஈரான் சரக்கு கப்பலில் இருந்து எண்ணெயை திருடியது.

திருடிய ஈரானிய எண்ணெய் பின்னர் அமெரிக்க துறைமுகங்களுக்கு மாறப்பட்டு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கு பதிலடியாக ஓமன் கடலில் எண்ணெய் ஏற்றிச் சென்ற அமெரிக்காவின் "செயின்ட் நிக்கோலஸ்" கப்பலை ஈரான் கடற்படை கைப்பற்றியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் கைப்பற்றப்பட்டதற்கு வெள்ளை மாளிகை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

"கப்பலை கைப்பற்றுவதற்கு எந்த நியாயமும் இல்லை. அவர்கள் அதை விட்டுவிட வேண்டும்" என்று வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பாகிஸ்தானில் நிமோனியா; 36 குழந்தைகள் உயிரிழப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் பஞ்சாப் மாகாணத்தில் குளிர் கால நிலையால் ஏற்பட்ட நிமோனியா காரணமாக 36 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் எதிர்வரும் 31ஆம் திகதி வரை பஞ்சாப் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் காலை பிரார்த்தனை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குளிர் கால நிலையில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க அடிப்படை சுகாதார வழிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி குழந்தைகள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும், கைகளை நன்றாக கழுவ வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருமல், காய்ச்சல் அல்லது தொண்டை வலி போன்ற அறிகுறிகள் உள்ள குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பக்கூடாது என்றும் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)

# ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் மீது பல நாடுகள் இணைந்து தாக்குதல்

(சனா)

ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பல இலக்குகளை குறிவைத்து பல நாடுகள் ஒன்றிணைந்து தாக்குதல்களை நடத்தியுள்ளன.

குறித்த தாக்குதல் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவுஸ்திரேலியா, பஹ்ரைன், கனடா மற்றும் நெதர்லாந்தின் ஆதரவுடன் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இணைந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில் குறித்த தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.


அண்மைக்காலமாக செங்கடலில் பயணிக்கும் வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்து ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்தி வரும் பின்னணியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொருளாதாரம் கணிசமாக முன்னேறியுள்ளது

## ஜப்பான் நிதி அமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் கணிசமாக முன்னேற்றம் கண்டிருப்பதாக ஜப்பான் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜப்பான் நிதி அமைச்சர் இற்கும் இடை யில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதியின் சிறந்த தலைமைத்துவத்தை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் முதலாவது மீளாய்வை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாகவும் இலங்கையில் ஏற்பட்டுள்ள வங்குரோத்து நிலைமை சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், இலங்கையின் பொருளாதார நிலைமையில் ஏற்பட்டுள்ள சாதகமான முன்னேற்றம் நம்பிக்கைக் குரியது என்றும், இது இலங்கை மீதான உத்தியோகபூர்வ மற்றும் தனியார் கடன் வழங்குநர்களின் சர்வதேச நம்பிக்கையை மேம்படுத்துவதாக அமைந்துள்ளதாகவும் ஜப்பான் நிதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (நி-5-6)

# அஸ்வெசும வேலைத்திட்டத்தால் 8 லட்சம் பேரின் சமுர்த்தி வெட்டு

## சதிச் செயலை அம்பலப்படுத்திய பொதுஜன பெரமுன

(கொழும்பு)

அஸ்வெசும வேலைத்திட்டத்தின் ஊடாக ஏறக்குறைய அரைவாசி மக்களின் சமுர்த்தி மானியம் குறைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார குறிப்பிட்டார்.

இதன்படி, இதுவரை சமுர்த்தி உதவித்தொகையை பெற்றுக்கொண்ட எட்டு இலட்சம் பேர் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அதனை இழப்பார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கொடிய குற்றம். கஷ்டப்பட்டு வாழ முயலும் மக்களின் மானியத்தை வெட்டி யாருக்கு கொடுக்க முயல்கிறார்கள்.

எனவே இதை அரசு உடனடியாக சரிசெய்ய வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அரசாங்கத்தில் உள்ளவர்களும் உதவி கேட்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் சமுர்த்தி வங்கிகள் 12 பில்லியன் இலாபத்தை ஈட்டியதாகவும் அவ்வாறான சேவைகளை வழங்கும் சமுர்த்தியை அரசாங்கம் புறக்கணித்து குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.30 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 77.68 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.15 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி-5-6)

# TIN இலக்கம் கட்டாயமாக்குவது

## ஏப்ரல் வரை தாமதமாகும்-நிதி அமைச்சு




(கொழும்பு)

வரி செலுத்துவோர் அடையாள எண்ணை கட்டாயமாக்குவது ஏப்ரல் வரை தாமதமாகும் என்று நிதி அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அடையாள எண் பெப்ரவரி இறுதிக்குள் முடிக்க வேண்டும் என்று முன்பு முடிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும் உள்நாட்டு இறை வரி திணைக்களத்திலோ அல்லது பிரதேச செயலகத்திலோ அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அடுத்த மாத இறுதிக்குள் இலக்கங்களை வழங்கி முடிக்க முடியாததால் ஏப்ரல் மாதம் வரை தாமதமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# பொங்கலன்று கைதிகளை பார்வையிட அனுமதி

## சிறைச்சாலை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தைப்பொங்கல் பண்டிகையையொட்டி, நாளை மறுதினம் 15ஆம் திகதி கைதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். குறித்த தினத்தில் இந்து மதக் கைதிகளுள் தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் முறையான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் அனுமதிக்கப்படுவர் என குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 04



தென்கச்சி கோசுவாமிநாதன்

## வாழ்வின் பொருள்

ஒரு பெரிய பாராட்டு விழா நடந்துகொண்டிருந்தது! ரயில்வேயிலே வேலை செய்துகொண்டிருந்த ஒருத்தருக்குத் தான் அந்த பாராட்டு விழா. அதுவும் சாதாரண தொழிலாளியாக வேலை செய்து கொண்டிருந்த ஒருத்தருக்கு அந்தப் பாராட்டுவிழா!

பல முக்கியமான தலைவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள் அவரைப் பற்றிப் பேசுவதற்க்காக! அந்தத் தொழிலாளி அன்றைக்குத்தான் தன்னுடைய வேலையிலே இருந்து 'ரிட்டயர்' ஆகின்றார்! எல்லாரும்தான் பதவியிலேயிருந்து ஒரு நாள் 'ரிட்டயர்' ஆகிறார்கள்! இருந்தாலும் எல்லாருக்கும் இந்த அளவுக்குப் பெரிசா விழா நடந்ததில்லை! ஆனால் இவருக்கு நடக்குது! அது ஏன்? காரணம் இருக்கு! என்ன காரணம் என்பது அவரைப்பற்றி பலபேர் பேசுகின்ற போது தான் புரிந்தது! ஒருத்தர் பேசினார்:

"இன்றைக்கு பதவி ஓய்வு பெறுகின்ற இந்தப் பெரியவர் இருக்கிறாரே, இவரு மற்ற எல்லாரையும் போல சாதாரணமானவர் இல்லை! தன்னுடைய கடமையிலே கண்ணாக இருந்தவர் கடமையில் இருந்து தவறியதில்லை

என்றைக்கு இந்த பதவியிலே சேர்ந்தாரோ அன்றையிலேயிருந்து இன்றைக்கு வரைக்கும் அவர் ஒருநாள் கூட 'லீவு' எடுத்தது இல்லை. இது ஒரு பெரிய சாதனை!" என்னார் அவர். இன்னொருத்தர் பேசினார் அவர் இந்த வேலையிலே எப்படி சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரைக்கும் இருந்து ரிட்டயர் ஆகிறார்! வாழ்நாளிலே அவருக்கு ஒரு சின்ன புரமோஷன் கூட கிடைக்கவில்லை! அப்படி இருந்தும் அவர் மனம் சலிப்படையவில்லை! தளர்ச்சியடையவில்லை ! தொடர்ந்து வேலைக்கு வந்தார்! தன் கடமையைச் செய்தார்!" அப்படி என்றார் இவர். இன்னொருத்தர் பேசினார் "ஒரு சமயம் அவருடைய சம்சாரத்துக்கு ரொம்ப உடம்பு சுகமில்லாம போச்சு! அந்த சமயத்தில கூட அவங்களை ஆஸ்பத்திரியிலே சேர்த்துட்டு நேராக வேலைக்கு வந்துவிட்டார்" என்றார். இப்படி இவர்கள் எல்லாம் பேசியது உண்மைதான்!

அப்படித் தான் அந்த பெரியவர் நடந்துகிட்டார்! ஒரு நாள்கூட கடமையிலே இருந்து தவறியது இல்லை! லீவு நாளிலேகூட அவர் வேலைக்கு வந்துவிடுவார். அவருடைய வேலை என்ன தெரியுமா? தினமும் ரயில்வே ஸ்டேஷனுக்கு வருவார். கையிலே ஒரு சுத்தியலோ.. இரும்புத் துண்டோ ஏதோ ஒன்று வைத்திருப்பார்! இதை கையிலே வைத்துக் கொண்டு பிளாட் பாரத்துலே வந்து நின்று கொண்டு இருப்பார்.

ரயில் வந்து நிற்கும்! உடனே இவர் தன் கடமையை ஆரம்பித்துவிடுவார். அதாவது 'இஞ்சின்'லே ஆரம்பித்து ஒவ்வொரு பெட்டியா பார்த்துக்கொண்டு வருவார். ஒரு பெட்டியும் - இன்னொரு பெட்டியும் இணைகின்ற இடம் இருக்குதல்லவா! அந்த இடத்துக்குப் போவார். கையிலே உள்ள சுத்தியலாலே அங்கே இரண்டு தட்டு தட்டுவார். மறுபடியும் வருவார். அடுத்த பெட்டிக்குப் போவார். ரெண்டு பெட்டிக்கும் நடுவாலே போவார். அங்கே போய் வழக்கம்போல சுத்தியாலே தட்டுவார்... மறுபடியும் வருவார்.. இப்படியே கடைசி பெட்டி வரைக்கும் போவார்.

இதுதான் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த வேலை! இதை அவர் ஒழுங்காக செய்தார். அந்த ரயில் போய் அடுத்த ரயில் வந்து நிக்கும்... உடனே மறுபடியும் இவரு வேலையை ஆரம்பித்துவிடுவார். ஒவ்வொரு பெட்டிக்கு நடுவிலே போயிதட்டிவிட்டு வருவார்..இந்த வேலையை அவர் கடைசி வரைக்கும் தவறாமல் செய்து முடித்திருக்கின்றார். அதனாலே தான் அவருக்கு இந்தப் பாராட்டு விழா!

பலபேரு பரிசு கொடுத்தாங்க! பொன்னாடை போர்த்தினாங்க! பாராட்டுப் பத்திரம் வாசிச்சுக் குடுத்தாங்க... எல்லாத்தையும் வாங்கிக்கொண்டு கடைசியா அவரு நன்றி தெரிவித்துப் பேசினார். தொண்டையை கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். என்னை அளவுக்கு அதிகமாக புகழ்ந்து "எல்லாரும் பேசினீங்க! ஏதோ என் கடமையை செய்தேன்! அதுக்கு மாதா மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டேன்! இன்றைக்கு ரிட்டயர் ஆகிறேன்! அவ்வளவுதான்! இதுக்குப்போய் இவ்வளவு பெரிய விழா தேவை இல்லை என்பது என் அபிப்பிராயம்!

ஆனாலும் இந்த கடைசி நேரத்திலே ஒரு சந்தேகத்தை உங்களிட்ட சொல்ல வேண்டும் என நினைக்கிறேன்.. இவ்வளவு வருடமும் கடமை தவறாமல் வேலை செய்தேன்! உண்மைதான்! ஒவ்வொரு ரயில்லேயும்-ஒவ்வொரு பெட்டியிலேயும் தவறாம போய் தட்டிக்கொண்டிருந்தேன்.

ஆனால் ஒரு விடயம். ஏன் அப்படித் தட்டினேன் என்பது இந்த நிமிடம் வரைக்கும் எனக்கு தெரியாத ஒன்று! தட்டச்சொன்னாங்க தட்டினேன்!"- என்றார். எப்படி இருக்குது இது! இந்தக்கதை யாருக்காக என்று நினைக்கிறீர்கள். ஏன் வாழ்கின்றோம் என்று தெரியாமலேயே இந்த உலகத்துலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் சிலபேர் உண்டு! அவர்களுக்காக! சும்மா சொல்கின்றேன் என்று நினைக்காதீர்கள் சிலபேர் செத்துப் போனார்கள் என்று சொல்லும்போது தான் அப்படி ஒருத்தர் உயிரோட இருந்தார் என்கிறது ஞாபகத்திற்கு வருகுது! இல்லையா?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டியில் விபத்து மூவர் காயம்

(முறிகண்டி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் சிறுகாயங்களிற்குள்ளாகியுள்ளனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் முறிகண்டி பொலிஸ் காவலரணுக்கு அண்மித்து ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக பேருந்து தரிப்பிடத்தில் தரித்திருந்த வேளை அதே திசையில் பயணித்த டிப்பர் வாகனம் பேருந்தின் பின்னால் மோதியுள்ளது.

சம்பவத்தில் சிறு காயங்களுக்குள்ளான பயணிகள் மூவர் கிளிநொச்சி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் அதனை சீர்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-100)

# மணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்தின் மணி விழா இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி கலையரங்கில் உப பீடாதிபதி தி.ஜெயகாண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. (நி-5-6)

# ரூ.70 லட்சம் பெறுமதியான வலைகள் அறுத்து நாசம்

## பருத்தித்துறையில் சம்பவம்


(கரணவாய்)

இந்திய மீனவ இழுவைப் படகுகளின் எல்லை தாண்டி மீன்பிடி காரணமாக பருத்தித்துறை, இன்பசிட்டி சுப்பர்மடம், சக்கோட்டை மீனவர்களின் சுமார் 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் இலங்கை எல்லை தாண்டி வடமராட்சி கடற்பரப்பில் கரையில் இருந்து மூன்று கடல் மைல் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை பத்து மீனவர்களது வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன. இதனால் அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-60)

# ஒதுக்குப்புறமாக இருப்பதால் வியாபாரம் நடைபெறவில்லை

## வேறு இடம் ஒதுக்கித் தருமாறு திருநெல்வேலி சில்லறை வியாபாரிகள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தையில் சிறு பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் தமக்கு நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருநெல்வேலி சந்தையில் நீண்டகாலமாக சிறு பொருட்களை வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், பிரதேச சபையினால் சந்தைக்குள் வேறு இடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஒதுக்கி கொடுக்கப்பட்ட இடமானது, சந்தையின் ஒதுக்குப்புறமான பகுதி என்பதால் அங்கு தமக்கு வியாபாரம் நடைபெறவில்லை. இட வாடகையாக முன்னர் 80 ரூபாய் வாங்கியவர்கள் தற்போது 150 ரூபாய் வாங்குகின்றார்கள். அதேவேளை மின்சார வசதிகள் கூட செய்து தரவில்லை. எமது வியாபார நடவடிக்கைக்காக சந்தைக்குள் நல்லதொரு இடத்தினை ஒதுக்கி தர உரிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர். (நி-5-6-33)

# ஜெனிற்றா பிணையில் விடுவிப்பு

(குருமன்காடு)

வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 5 ஆம் திகதி வவுனியா விஜயம் செய்த போது வட-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி உட்பட இருவர் நீதிமன்ற கட்டளையினை மீறி ஜனாதிபதி வருகைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததாக தெரிவித்து வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், மற்றைய பெண் அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த வழக்கானது நேற்று வவுனியா நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சங்கத்தின் தலைவியை ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (நி-5-6-280)



கேமா அறக்கட்டளையினால் காங்கேசன்துறை மேற்கில் வசிக்கும் குடும்பங்களுக்கு தைத்திருநாளை சிறப்பாக கொண்டாடும் முகமாக பொங்கல்பானை, அகப்பை உள்ளிட்ட பொங்கல் பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

(படம்: சிவசாந்தன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 600 | 550 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1200 | 1200 |
| தக்காளி | 600 | 600 | 500 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 150 | 160 |
| கோவா | 450 | 500 | 550 | 600 |
| கரட் | 900 | 1150 | 1200 | 1400 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 |
| புடோல் | 350 | 280 | 250 | 200 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 440 | 450 | 500 |
| பாகற்காய் | 1000 | 800 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 350 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 700 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 600 |
| பீற்றூட் | -- | 800 | 400 | 800 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 600 | 550 |
| கீரை - 1 பிடி | 160 | 160 | 180 | 200 |
| தேசிக்காய் | 250 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 700 | 550 | 500 |
| வெங்காயப்பூ | 650 | 800 | -- | 1000 |
| முள்ளங்கி | 180 | 250 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 35 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 150 | 200 |

# வவுனிக்குள அணைக்கட்டு வழியாக வாகனங்கள் செல்ல தடைவிதிப்பு

## தொடர்ந்து அமுலில் உள்ளதாக நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக் குளத்தின் அணைக்கட்டு வழியாக வாகனங்கள் செல்வதற்கான தடைகள் தொடர்ந்து [illegible] கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகா தெரிவித்துள்ளார்.

வவுனிக்குளம் அணைக் கட்டு வழியாக பயணித்தவாகனம் ஒன்று கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் குளத்திற்குள் பாய்ந்து விபத்துக்கு உள்ளானதில் 03 உயிரிழப்புகள் இடம்பெற்றன.

இதன் பின்னர் அணைக் கட்டு வழியாக வானங்கள் செல்வதற்கான தடையினை ஏற்படுத்தி இருந்தோம். தற்போதும் இத்தடை அமுலில் உள்ளது.

இதனை விட வாகனங்கள் அணைக்கட்டு வழியாக பயணிக்கின்ற போது அணை சேதமடைகின்ற நிலைமை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6-350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 377



இரண்டு குதிரைகளையும் பிடித்துக்கொண்டு வந்தான். ஒன்றில் தான் ஏறிக் கொண்டான். ஆழ்வார்க்கடியானை இன்னொன்றின் மேல் ஏறிக் கொள்ளச் சொன்னான். "சற்று நேரத்தில் இந்தப் பாதையுடன் சில குதிரைகள் போகும். அவற்றின் பின்னோடு நாமும், தொடர்ந்து போகவேண்டும்" என்றான்.

வந்தியத்தேவன் "எனக்குக் குதிரை?" என்று கேட்டான்.

"இவரை மட்டுந்தான் அழைத்து வரும்படி எனக்குக் கட்டளை!"

"யாருடைய கட்டளை!"

"அதைச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை."

"இளவரசரை நான் உடனே பார்த்தாக வேண்டும். மிக முக்கியமான செய்தி கொண்டுவந்திருக்கிறேன்."

"அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஐயா!"

ஆழ்வார்க்கடியான், "தம்பி! கொஞ்சம் பொறுமையாயிரு! நான் போய் இளவரசரிடம் சொல்லி உன்னையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

"வைஷ்ணவரே! நான் கொண்டு வந்திருக்கும் செய்தி மிக முக்கியமானது, மிக அவசரமானது என்று உமக்குத் தெரியாதா?"

"அந்த ஓலையை என்னிடம் கொடு நான் கொடுத்து விடுகிறேன்."

"அது முடியாது."

"அப்படியானால் கொஞ்சம் பொறுத்திரு, வேறு வழி இல்லை!"

"வேறு வழி இல்லையா?"

"இல்லவே இல்லை!"

வந்தியத்தேவனுடைய உள்ளம் குமுறியது. ஆழ்வார்க்கடியானை இளவரசரிடந்தான் அழைத்துப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. 'ஆழ்வார்க்கடியான் அவரிடம் என்ன சொல்கிறான்' என்பதைச் சேனாதிபதி கவனிக்கச் சொல்லியிருக்கிறார். அது முடியாமற் போய்விடுமே? குதிரைகள் நெருங்கி வந்தன் அவர்கள் இருக்கும் இடத்தைக் கடந்து சென்றன் மின்னல் மின்னும் வேகத்தில் பறந்து சென்றன.

மண்டபத்தில் குதிரைகள் மீது ஆயத்தமாயிருந்த இருவரும் குதிரையின் முகக் கயிற்றை இழுத்துக் குலுக்கிப் புறப்படத் தூண்டினார்கள். அச்சமயத்தில் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. குதிரை மேலிருந்த மனிதனுடைய ஒரு காலை வந்தியத்தேவன் பிடித்து ஒரு எத்து எத்தித் தள்ளினான். அந்த மனிதன் தடால் என்று விழுந்தான்.

வந்தியத்தேவன் குதிரை மீது தாவி ஏறினான் குதிரை பறந்தது. தொடர்ந்து ஆழ்வார்க்கடியானுடைய குதிரையும் பறந்தது. கீழே விழுந்த வீரன் கூச்சலிட்டு விட்டு உறையிலிருந்த கத்தியை எடுத்து எறிந்தான். வந்தியத்தேவன் தலை குனிந்து குதிரையின் முதுகோடு ஒட்டிப் படுத்துக் கொண்டான். வீரன் எறிந்த கத்தி வேகமாகச் சென்று ஒரு மரத்தில் ஆழமாய்ப் பாய்ந்தது. குதிரைகள் இரண்டும் காற்றாய்ப் பறந்து சென்றன.

முன்னால் சென்ற மூன்று குதிரைகளையும் பின் தொடர்ந்து ரொம்பவும் நெருங்காமலும், ரொம்பவும் பின் தங்காமலும் இந்த இரண்டு குதிரைகளும் சென்றன. "நல்ல வேலை செய்தாய், தம்பி!" என்று ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை உற்சாகப்படுத்தினான். ஆனால் வந்தியத்தேவன் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. இதன் முடிவு என்ன ஆகப் போகிறதோ என்று அவன் உள்ளம் கவலையில் ஆழ்ந்திருந்தது. ஒரு பெண்ணின் வார்த்தையின் பொருட்டு எதற்காக கடல் கடந்து இந்தத் தூர தேசத்தில் வந்து, இத்தகைய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோம் என்ற சிந்தனையும் உதித்தது. குதிரைகள் வாயு வேக, மனோ வேகமாய்க் குறுகிய காட்டுப் பாதையில் போய்க் கொண்டிருந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குழப்பவாதிகள்



முல்லா நஸ்ருதீன் மன்னருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அது அரசசபையில் இருந்த பலருக்கு பிடிக்கவில்லை.

ஒருமுறை முல்லா ஒரு நண்பரின் திருமணத்திற்கு சென்ற போது பேச்சுவாக்கில் நாட்டில் உள்ள அறிஞர்கள் எல்லாம் குழப்பவாதிகள். எதையுமே உறுதியாக, தீர்மானமாகக் கூற இயலாதவர்கள் என்று சொன்னார்.

அதை அறிந்த முல்லாவின் எதிரிகள் மன்னரிடம் போய் "மன்னர் நீங்க அறிஞர்களை வைத்திருப்பதற்கு பதிலாக குழப்பவாதிகளை வைத்திருப்பதாகவும சரியான முடிவு எடுக்கத் தெரியாமல் இருக்கும் அறிஞர்கள் பேச்சு கேட்பதாகவும் முல்லா சொல்லிக் கொண்டு திரிகிறார் என்று அரசரிடம் முல்லாவைப் பிடிக்காதவர்கள் கூறித் தூண்டிவிட்டார்கள்.

உண்மை நிலையை அறிய விரும்பிய அரசர், முல்லாவை சபைக்கு வரவழைத்தார்.

அத்துடன், தத்துவ மேதைகள், மார்க்க ஞானிகள், சட்ட நிபுணர்கள், அறிவுசால் அமைச்சர்கள் அனைவரையுமே கூட்டினார். பிறகு முல்லாவை நோக்கி, " இவர்கள் எலலாம் குழப்பவாதிகள் என்று கூறினீர்களாமே? ஏன் அப்படிக் கூறினீர்கள் ? இவர்கள் குழப்பவாதிகள் என்று உம்மால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார்.

இது என்னடா வம்பா போச்சு, சும்மா வாய் பேச்சுக்கு சொன்னதை வைத்து என்னை மாட்டிவிடப் பார்க்கிறீங்களா, அப்போ நீங்க குழப்பவாதிகள் தான். அதை நிரூபித்தால் ஆச்சுது என்று நினைத்து "அரசே என்னால் நிரூபிக்க முடியும்" என்று கூறிய முல்லா, அனைவரிடமும் ஆளுக்கொரு தாளைக் கொடுத்தார்.

பின்னர் அவர்களிடம் "அறிஞர் பெருமக்களே! நான் ஒரே ஒரு கேள்வி தான் கேட்கப் போகிறேன். அதற்குரிய பதிலை, இந்தத் தாளில் நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டும்" என்றார்.

பின்னர், அவர்களிடம் ஒரு தாளை கொடுத்தார். அதில் , "ரொட்டி என்றால் என்ன?" என்று கேட்டார். அனைவரும் பதிலைத் தாளில் எழுதி அரசரிடம் கொடுத்தார்கள். அரசர் படிக்க ஆரம்பித்தார்.

ஒருவர்- ரொட்டி என்பது சத்துள்ள பண்டம் என்று எழுதியிருந்தார்.

இரண்டாமவர் - ரொட்டி என்பது ஒரு உணவு என்று குறிப்பிட்டிருந்தார்.

மூன்றாமவர் - இறைவன் கொடுத்த கொடையே ரொட்டி.

நான்காமவர் - ரொட்டி என்பது வேகவைத்த மாவுப் பொருள்.

ஐந்தாமவர் - ரொட்டி என்பது மாவும் நீரும் கலந்த கலப்பு.

ஆறாமவர் - அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப சுவையும் வடிவும் பெறுவது ரொட்டி.

ஏழாமவர் - ரொட்டி என்பதற்கு சரியான பொருள் யாருக்குமே தெரியாது? என்று குறிப்பிட்டு எழுதியிருந்ததை அரசர் படித்தார்.

எல்லா பதில்களையும் அரசர் படித்து முடிக்கும்வரை பொறுமையுடன் காத்திருந்த முல்லா, "அரசே ! ரொட்டி என்பது என்ன? என்ற எனது சாதாரண கேள்விக்கு இவர்கள் அனைவரும் பலவிதமான பதில்களைக் கொடுத்துள்ளார்கள்.

யாருடைய பதிலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகவில்லை பார்த்தீர்களா?

இதனால்தான் நம் நாட்டில் உள்ள அறிஞர்கள் குழப்பவாதிகள் என்றேன்" என்றார்.

அரசர் முல்லாவில் அறிவாற்றலை வியந்து அவர்மீது இருந்த குற்றச் சாட்டினைத் தள்ளுபடி செய்தார். அரசவையில் கூடியிருந்த அனைவரும் முல்லாவின் திறமையை பாராட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சட்டத்தரணிகளின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்தது

தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து கொள்வதற்கு இன்னும் பல பிறவிகள் எடுக்க வேண்டும். அந்தளவுக்கு தமிழ் மொழி உன்னதமானது.

ஆம், ஒருவரின் பிறப்பைக் கூறுவதற்கு அவரின் தன்மையின் பால் கவனம் செலுத்துகின்ற மிக உன்னதமான பண்பு தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு.

முருகன் உதித்தான், இயேசுபாலகன் அவதரித்தார், காந்தியடிகள் இம்மண்ணில் தோன்றினார் என விழித்து சாதாரண மனிதர் பிறந்தார் என அவரவர் மாண்பின் பாற்பட்டு அவர்களின் பிறப்பு, மொழியால் மகிமைப் படுத்தப்படுகிறது.

இதேபோன்று பதவிகளுக்குக்கூட அதன் தன்மையறிந்து பெயர் சூட்டுகின்ற இயல்பை தமிழ் மொழியில் காணமுடியும்.

சிவப்பரம்பொருளை வைத்தியநாதன் என்று விழித்த நம் தமிழ்; டாக்டர்களை வைத்தியர்கள் என்று இறைவனுக்கு ஒப்பாக்கியது.

இதேபோன்று குற்றம் களைந்து வித்தை கற்பிப்பதனால் குரு என்றும் ஆசிரியர் என்றும் புகன்ற நம் தமிழ் மொழி, சட்டத்தரணிகளை வழக்கறிஞர்கள் என்று விதந்துரைத்தது.

இங்குதான் வழக்கறிஞர் என்பதன் பொருள் உணர்தற்குரியது.

ஆம், அறிஞர்கள் எப்போதும் ஆற்றல் மிக்கவர்கள், அவர்களின் சிந்தனை எல்லாம் உண்மை வாழ வேண்டும். நீதி நிலைக்க வேண்டும். தர்மம் வெல்ல வேண்டும் என்பதுதான்.

ஆக, சட்டத்தரணிகளை மட்டும் வழக்கறிஞர் என்று விதந்துரைத்ததன் மூலம் அவர்கள் நீதிக்காக குரல் கொடுக்க வேண்டும். அவர்களால் தர்மம் நிலைக்க வேண்டும்.

அவர்கள் தர்மத்துக்கு மாறாக நடப்பார்களாயின், இந்த மண்ணில் அறம் பிழைத்து மறம் ஓங்கும். நீதி கிடைக்க வேண்டியவர்களுக்கு நீதி கிடைக்காவிடில், அது இயற்கையைப் பாதிக்கும். மாரி பெய்யாது போகும். உணவுப் பயிர்கள் விளைய மறுக்கும். பஞ்சமும் பசியும் தலைவிரித்தாடும்.

ஆகையால் நீதி நிலைக்க வேண்டுமாயின், அதற்கு சட்டத்தரணிகள் உதவ வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவர்களை வழக்கறிஞர் என நம் தமிழ் மொழி குறித்துரைத்தது.

ஆனால் இப்போது நம் வடபுலத்தில் சட்டத்தரணிகள் சிலர் கன்மவினைக் கோட்பாட்டை மறந்து செயற்படுகின்றனர்.

நீதியை, அறத்தை எடுத்துரைக்காமல் சட்டத்தால் எல்லாவற்றையும் வெல்லலாம் என்பது போல வழிகாட்டுகின்றனர்.

இதனால் நம் வடபுலத்தில் அப்பாவி மக்கள் கண்ணீர் விடுகின்றனர்.

அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற கண்ணீர் என்ன செய்யும் என்பதை திருக்குறள் அறம் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

எனவே எங்கள் வழக்கறிஞர்கள் வடபுலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காணிப் பிரளயத்தில் இருந்து நம் மக்களைப் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் நிலைமை மிக மோசமாகுவதைத் தடுக்க முடியாமல் போகும்.

## பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான 12 இந்திய மீனவர்களும்

### நிபந்தனை அடிப்படையில் விடுதலை

(கரணவாய்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான பன்னிரண்டு இந்திய மீனவர்களையும் நிபந்தனையின் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 9ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கு எதிரான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

கடந்த புதன்கிழமை இவ் வழக்கில் படகின் உரிமையாளரை பிரதான சந்தேகநபராக இணைத்துக் கொள்ளலாமா என்பது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தை சேர்ந்த அரச சட்டவாளர் நீதி மன்றில் முன்னிலையாகி அவரை பிரதான சந்தேகநபராக ஏற்றுக்கொள்ளலாம் என தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் நேற்று வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீரியல் வளத்துறையால் மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

மூன்று குற்றச்சாட்டுகளையும் மீனவர்கள் ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுக்கும் தலா ஆறு மாத சாதாரண சிறை தண்டனைப்படி 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்த பருத்துத்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை அதனை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து தீர்ப்பளித்தார்.

இதே வேளை படகின் உரிமையாளரை முதலாவது சந்தேகநபராக குறிப்பிடப்பட்டு அவருக்கான அழைப்பாணை இலங்கை நீதித்துறை ஊடாக அனுப்புவதற்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ம-7,60)

## இலங்கைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் விபத்து

இலங்கை விமானப் படைக்கு சொந்தமான MI-17 ஹெலிகொப்டர் ஒன்று, மத்திய ஆபிரிக்காவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில் மோசமான வானிலை காரணமாக ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

ஹெலிகொப்டரில் 5 பேர் இருந்தபோதும் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## வைத்தியசாலையை பார்வையிட்ட அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

இலங்கை மன்ற உறுப்பினர்களால் தெஹிவளையில் நிர்மாணிக்கப்படும் புதிய வைத்தியசாலையை பார்வையிட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்று ஜூலி சங் சென்றுள்ளார்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில்,

இலங்கை மன்ற உறுப்பினர்களால் 40 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் முழு வசதிகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, பிறந்த குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவு (NICU) மற்றும் கதிரியக்கப் பிரிவு ஆகியவற்றைஉள்ளடக்கிவைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

இங்கு பணிபுரியும் மருத்துவப் பணியாளர்களுக்கு திறன் மற்றும் பயிற்சியை வளர்ப்பதற்கான வழிகளை திட்ட மேலாளர்களுடன் நான் கலந்தாலோசித்தேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடும் மழையுடனான காலநிலை தொடரும் நிலையில் 10 மாவட்டங்களிலுள்ள 28 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் பதுளை, காலி, கண்டி, களுத்துறை, மாத்தளை, மாத்தறை, மொனராகலை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கே குறித்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடரும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 635 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெள்ளம் மற்றும் மண்சரிவு, மரம் முறிந்து விழுதல் உள்ளிட்ட அனர்த்தங்களால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 6 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 318 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில், மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள இடங்களைச் சேர்ந்த மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு

### புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம்

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு (சிஐடி) புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, மேல் மாகாண (வடக்கு) பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பிரேமரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் சேவை தெரிவித்துள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரொஹான் பிரேமரத்ன இதற்கு முன்னர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய காலத்தில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பொறுப்பான பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கனேமுல்ல சஞ்சீவ உட்பட பல ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியாக அவர் கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பொதுமக்களிடம் மோசடி சந்தேகத்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

பேலியகொட வணிக வளாகம் மற்றும் கொம்பனித்தெரு பகுதியில் குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு வீடுகளை வழங்குவதாகக் கூறி மக்களிடம் பணத்தை மோசடி செய்த நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்த நிலையில், பல்வேறு நபர்களிடம் இருந்து 19,663,800 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாகின்ன, கஹவத்த பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## இரட்டை வரி தொடர்பாக இலங்கை - துருக்கி ஒப்பந்தம்

வருமான வரிகள் மற்றும் வரி உயர்வு மற்றும் தவிர்ப்பு ஆகியவற்றைத் தடுப்பது தொடர்பான இரட்டை வரி விதிப்பை நீக்குவது தொடர்பாக இலங்கை அரசுக்கும் துருக்கி அரசுக்கும் இடையிலான ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி அப்போதைய வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இது கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளின் உள் தேவைகள் முடிந்த பிறகு 11 டிசம்பர் 2023 அன்று நடைமுறைக்கு வந்தது.

இலங்கையும் துருக்கியும் இராஜதந்திர உறவுகளில் 75 வருடங்களை இந்த ஆண்டு கொண்டாடும் நிலையில், இரு நாட்டு மக்களுக்கும் பரஸ்பர நன்மைகளை ஏற்படுத்தும் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவது இருதரப்பு உறவுகளின் மற்றொரு அடித்தளமாகும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)

10


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.




ஜன சபைக்கான துணைக் குழுக்கள், குழு உறுப்பினர்களின் தலைமையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக நிறுவப்படலாம். ஆர்வமுள்ளவர்கள் அந்தக் குழுக்களில் பங்கேற்கலாம்.

பேரிடர் முகாமைத்துவம், கிராமப்புற விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகள், கிராமப்புற விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் பிற கிராமப்புற தொழில்கள், உள்ளூர் நீர்வள முகாமைத்துவம், மற்றும் பாதுகாப்பு, கிராமப்புற காடுகள் மற்றும் காடுகளின் பாதுகாப்பு, முதன்மை நடுவர் செயல்முறை தொடர்பான விடயங்கள், கிராமப்புற நிர்வாக உதவி விவகாரங்கள், சிவில் பாதுகாப்பு (சிவில் பாதுகாப்புக் குழுவின் செயற்பாடுகள், கிராமப்புற உணவுப் பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்தில் பொருத்தமானதாகக் கருதப்படும் பிற செயற்பாடுகள்) போன்றவையாகும்.

### கிராமிய ஜன சபையுடன் சம்பந்தப்பட்ட மற்றைய விடயங்கள்

அரசியல் கட்சி முறைமை எந்த வகையிலும் அமுல்படுத்தப்படக் கூடாது. சுயேட்சையான நியமனங்களும் தெரிவுகளும் இந்த அமைப்பிற்குள்ளேயே நடைபெற வேண்டும். கிராமிய ஜன சபையின் செயலாளர், அரசியல் கட்சி மற்றும் கிராமப்புற உயரடுக்கின் செல்வாக்கு இல்லாமல் அனைத்து கட்சிகளுக்கும் சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக தொடர்புடைய துணை அளவுருக்களின்படி செயற்பட வேண்டும்.

மேலும், தேவையின் அடிப்படையில், இந்த சபையை தேசிய அளவில் கொள்கை முடிவுகள் குறித்த பொது ஆலோசனைக்காக ஒரு சபையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சபைகளுக்கு டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படையிலான "ஸ்மார்ட" நுட்பங்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பங்கள் மூலம் நேரடியாக பொது மனுக்களை சமர்ப்பிக்க தேவையான வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

மேலும், சபைகளின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் வகையில், சபை நடவடிக்கைகளுக்கு குறிப்பிடப்படும் அனைத்து தகவல்களையும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் பெறுவதற்கான முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அந்தந்த ஜன சபைகளின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக நேரடியாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஜாதிக ஜன சபை செயலகம் கொண்டிருக்க வேண்டும்.

### பிரதேச மக்கள் சபை முகாமைத்துவ குழு

பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள அனைத்து ஜன சபைத் தலைவர்களாலும், பிரதேச செயலாளர் உட்பட அரச அதிகாரிகளாலும் மாதம் ஒருமுறை நடத்தப்படும் கூட்டம். அவசரநிலை ஏற்பட்டால், பிரதேச செயலாளர் மாதாந்த கூட்டத்திற்கு மேலதிகமாக ஜன சபையின் தலைவர்களின் அவசர கூட்டங்களை கூட்ட முடியும். பிரதேச செயலாளர் தலைமையில் கூட்டம் இடம் பெறும்.

பிரதேச செயலாளரால் பரிந்துரைக்கப்படும் திட்டமிடல் பணிப்பாளர் அவர்கள் கூட்டத்தின் அறிக்கையை தயாரித்து அனுப்பி வைக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தின் அறிக்கை ஜாதிக ஜன சபை செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும், அவசர காரியம் ஒன்றுக்காக அவசர கூட்டத்தை கூட்டுமாறு ஜன சபையின் தலைவர்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுக்க முடியும்.

ஜன சபைகளின் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் குறித்து பிரதேச ஜன சபை முகாமைத்துவக் குழு கலந்துரையாடும்.

அந்தந்த ஜன சபைகள் தொடர்பான தீர்க்கப்படாத பிரச்சினைகளை (அபிவிருத்தி மற்றும் கொள்கை) மாகாண ஆளுநர்/மாகாண பிரதம செயலாளர் அல்லது மாகாண அமைச்சின் செயலாளர்/மாவட்ட செயலாளர்/ திணைக்களத் தலைவர்கள் அல்லது பொது நிறுவனங்களின் தலைவர் ஆகியோருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் குறித்து இங்கு தீர்மானிக்கப்பட வேண்டும்.

### ஜாதிக ஜன சபை

**நோக்கம்** - தேசிய கொள்கை உருவாக்கத்தில் சுற்றுப்புற மக்களை பங்களிக்கச் செய்தல்

**இணைப்பாக்கம்** - மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 100. இது கிராமிய ஜன சபையின் குழு உறுப்பினர்களிடமிருந்து அழைக்கப்பட்ட 75 பேர் கொண்ட குழு மற்றும் தொழில் முறை நிபுணர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், பெண்கள் மற்றும் இளைஞர் ஆர்வலர்கள் ஆகியோரின் தகுதி மதிப்பீட்டின் அடிப்படையில் இணைக்கப்பட்ட 25 பேர் கொண்ட குழுவைக் கொண்டுள்ளது.

கூட்டங்கள்- ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் கூட்டம் நடைபெறும். அவசரச் சூழ்நிலையில் சிறப்புத் தலைப்புகளைப் பற்றி விவாதிக்க அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படலாம்.

### தெரிவுகள்

தலைவர் - ஜாதிக ஜன சபையின் தலைவர் பதவியானது கௌரவ பதவியாக நிறுவப்பட்டு பாராளுமன்ற சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் நியமிக்கப்படும். அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தின் பின்னர், அரசியலமைப்பு சபையினால் அமுல்படுத்தப்படும். கால அளவு 03 ஆண்டுகள்.

மற்ற 100 உறுப்பினர்கள் நிரந்தர உறுப்பினர்கள் அல்ல. விவாதிக்கப்பட்ட விஷயங்களின் அடிப்படையில் ஒரு மாதத்திற்கு ஒருமுறை ஒழுங்குமுறையின்றி அவைகூட்ட அழைப்புவிடுதல் செய்யப்படுகிறது. இது மக்கள் நடுவர் மன்றத்தின் ஒரு வடிவமாக இருக்கும்.

அனைத்து கிராமிய ஜன சபையின் குழு உறுப்பினர்களும் ஒரு டிஜிட்டல் தரவு அமைப்பில் பதிவு செய்யப்படுவார்கள். மாதத்தின் கடைசி வாரத்தில் ஜன சபையால் விவாதிக்கப்படும் தலைப்புகள் அவர்களுக்கு ஸ்மார்ட் அப்ளிகேஷன் மூலம் அனுப்பப்படும்.

அதன் பின்னர், அவர்/அவள் தனது நிபுணத்துவம் மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப அந்த தலைப்பில் அவருக்கு/அவளுக்கு கருத்து உள்ளதா என்பதை தெரிவிக்க வாய்ப்பு கொடுக்கப்படும்.

இது பிரதான தரவு அமைப்பில் பதிவு செய்யப்படும். வாய்ப்புக் கோரும் நபர்களில் 70 நபர்கள், மேற்படி மாதத்தில் ஜன சபையில் பங்கேற்க, சுற்றுவட்டார மக்கள் பிரதிநிதிகளாக, மாவட்ட அடிப்படையில் தோராயமாக தெரிவு செய்யப்படுவர்.

தொழில்முறை நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களிடமிருந்து விண்ணப்பங்களை அழைப்பதன் மூலம் ஒரு தரவு அமைப்பு பராமரிக்கப்படும். மேலும் அவர்களின் நிபுணத்துவத்திற்கு ஏற்ப அவை வகைப்படுத்தப்படும்.

அவர்களில் தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 30 நபர்கள் ஒவ்வொரு மாதமும் ஜாதிக ஜன சபையில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

### ஜாதிக ஜன சபையின் செயற்பாடு

ஜாதிக ஜன சபையின் கூட்டங்களின் அறிக்கைகள் ஜாதிக ஜன சபையின் தலைவரால் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

அதன்படி, கொள்கைகளை வகுப்பதில் அது கருத்தில் கொள்ள வேண்டும் மற்றும் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் செயற்பாட்டில் அந்தக் கருத்துகளுக்கு சரியான மதிப்பைக் கொடுக்க வேண்டும்.

### ஜாதிக ஜன சபையின் தலைவர்

ஜாதிக ஜன சபையின் தலைவர் என்பது நெறிமுறைகளின்படி நிறுவப்பட்ட கௌரவமான பதவியாகும். இந்த தலைவர் பாராளுமன்ற கவுன்சிலால் (அரசியலமைப்பு கவுன்சில், அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்திற்குப் பிறகு) நியமிக்கப்படுவார்.

### ஜாதிக ஜன சபைத் தலைவரின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்

ஜாதிக ஜன சபையின் தீர்மானத்தின்படி ஜாதிக ஜன சபையைக் கூட்டுதல், தலைமை தாங்குதல் மற்றும் ஒத்திவைத்தல் இவரின் கடமைகளாகும்.

ஜாதிக ஜன சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பொது மனுக்களை பரிசீலித்து, அதற்கமைவாக அவைகளை பாராளுமன்றத்திற்கு கலந்தாய்வதற்காக சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வருதல்.

பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்புக் குழு அமைப்பை வலுப்படுத்துவதற்கு தேவையான வகையில் ஜாதிக ஜன சபையுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு ஜாதிக ஜன சபையின் உறுப்பினர்களை உரிய முறையில் ஈடுபடுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டநாதர்...

திய அதிகாரி செல்லையா பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்டோர் விஜயம் செய்து பார்வையிட்டு விசாரணையில் ஈடுபட்டனர்.

விஸ்வநாதப்பிள்ளை யோகேந்திரன் என்ற 62 வயதானவரே இவ்வாறு நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழப்பு இடம்பெற்று சில தினங்களாகி இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையா? தற்கொலையா? என்பது விசாரணைகளின் பின்னரே தெரிய வரும் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## உயர்தரப்...

2023ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சை விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் வினாத்தாள் முன்னதாக வெளியான தகவல்களால் மூன்று மொழிகளிலும் குறித்த பரீட்சை இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனவரி 10ஆம் திகதி மாணவர்கள் எழுதிய வினாத்தாள், தேர்வுத் திகதிக்கு முன்பே கசிந்ததால், வினாத்தாள் செல்லாததாகக் கருதப்பட்டது.

மாற்றியமைக்கப்பட்ட வினாத்தாளுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## எம்.பிக்கள்...

களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி கூறியதாக குறித்த பதிவு தொடர்பில் பலர் தமது எதிர்ப்பை தெரிவித்தும் வருகின்றனர்.

இலங்கையின் இணையத்தளம் ஒன்றை மேற்கோள்காட்டி இந்த செய்தி பகிரப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில், ஜனாதிபதி ஊடகப் பிரிவிடமும் FactSeeker மேற்கொண்ட விசாரணையில், ஜனாதிபதி அவ்வாறான கருத்தை வெளியிடவில்லை எனவும், இது பொய்யான அறிக்கை எனவும் உறுதிப்படுத்தப்பட்டது. (ம-7)

## நுவரெலியா...

களத்தின் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தைப்பொங்கல் தினமானது தமிழர்கள் நன்றி பகரும் நாளாகும். அன்றைய நாள் புனிதம் மிக்கதாகும்.

ஆகவே தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் தைப்பொங்கல் தினத்தன்று மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் உத்தியோகபூர்வமாக விடுத்திருந்த கோரிக்கைக்கமையவே மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேற்படி தீர்மானத்தை உறுதிப்படுத்தியிருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## தமிழர்களுக்கு...

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாட்டின் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதற்காக தைப்பொங்கலையும், சிங்கள, தமிழ் புத்தாண்டையும் தெரிவு செய்திருந்தனர். எனினும், தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இந்நிலையில், ஒவ்வொரு தைப்பொங்கலையும் தமிழ் - சிங்கள புத்தாண்டையும் தமிழ் மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடனேயே கடந்துச் சென்றுள்ளனர். இந்த தைப்பொங்கல் காலத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதற்கு ஏற்ற முறையில் ஜனாதிபதி செயற்படுவார் என நம்புவதாகவும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்ற ஆசை அன்றிலிருந்து இருந்தது.

எனினும், அவரைச் சுற்றியிருந்தவர்கள் அதற்கு இடம் கொடுக்காமல் இழுத்தடித்ததாகவும், அதனால் தமிழ் மக்களின் நம்பிக்கை ஏமாற்றத்தில் முடிவடைந்ததாகவும் சம்பந்தன் கூறியுள்ளார்.

தென்னிலங்கையின் இனவாத அரசியலுக்கு மத்தியில் தமிழ் மக்களுக்கு சற்று நிவாரணம் வழங்குவது மிகவும் கடினமான விடயம் என்பதை அனைவரும் புரிந்து கொண்டுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களும் கிடைக்க வேண்டிய உரிமைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார். (ம-7)

## ஜப்பானிய...

யில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

ஜப்பான் தனது பொருளாதாரத்தின் விரைவான தொழில் மயமாக்கல் மூலம் அதன் ஏற்றுமதித் துறையை எவ்வாறு மேம்படுத்த முடிந்தது என்பது உட்பட இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் ஜப்பானின் புனரமைப்பு அனுபவத்திலிருந்து இலங்கை பாடங்களைக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக் கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக் காட்டினார்.

கொழும்பு இலகு ரயில் திட்டத்தை திடீரென இரத்துச் செய்வதற்கு முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்த தொலைநோக்குப் பார்வையற்ற தீர்மானத்திற்கு தனது வருத்தத்தைத் தெரிவித்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது கட்சியின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கத்தில் இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ஜப்பான் நிதியமைச்சரிடம் உறுதியளித்தார்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் அல்லது JAICA நிறுவனத்திடம் இருந்து பல வருடங்களாக பெற்ற ஒத்துழைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜப்பான் நிதி அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

ஜப்பானின் வடபகுதியில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப் பட்ட ஜப்பானிய மக்களுக்கு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்தார்.

எரான் விக்ரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, ஹர்ஷன ராஜகருணா உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டது. (ம-7)

## பயங்கரவாத...

அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அதன் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளரர்.

பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள குறித்த சட்டமூலத்திற்கு அமைய இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினரால் எந்தவொரு நபரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதாக குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கைது செய்யப்படும் நபர்களை கட்டாயமாக தடுத்து வைக்கும் அதிகாரம் பாதுகாப்புத் தரப்பினருக்கு கிடைப்பதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 0183
U 1 3 8 4 9 9 U

தன நிதானய
திகதி - 2024.01.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1387
L 09 27 34 75 L
75318

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3599
சீட்டிழுப்பு திகதி 12.01.2024
D 19 34 69 73
D 40140

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 0666
தனுசு 23 32 45 50 தனுசு
15570 16

மஹஜன சம்பத
திகதி 2024/01/12
சீட்டிழுப்பு இலக்கம் 5357
W 1 5 3 6 0 0

மெகா பவர்
திகதி 12/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1705
Q 17 07 38 39 72
18599

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.01.2024 வெற்றி வாரம் 065
L 8 4 1 8 1 9
48805
26,223,843.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2331
சீட்டிழுப்பு திகதி 2024.01.12
வர்ணம் இளஞ்சிவப்பு
தினம் வெள்ளிக்கிழமை
02 33 42 46 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,603,597.60
85249

சனிதா
திகதி 2024.01.12 வெற்றி வாரம் 4492 வர்ணம் செம்மஞ்சள்
08 42 46 67 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,820,614.40
30271

சசிரி
427
2024.01.12
பச்சை
31 | 33 | 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,816,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4043
சீட்டிழுப்பு திகதி 2024.01.12
வர்ணம் கரும் நீலம்
தினம் வெள்ளிக்கிழமை
11 32 54 57 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,207,892.40
107316

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 27 01 31 46 65
1507
12.01.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 491,566,356.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2157
சீ.முழுப்பு திகதி : 2024.01.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,060,761.60
01 07 44 67 W
870542


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி சிக்கல்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான முதலாவது மீளாய்வை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாழ்த்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட சவாலான பொருளாதார சீர்திருத்தங்களைப் பாராட்டியது.

ஆசியாவின் முன்னோடி முயற்சியான ஆட்சியைக் கண்டறியும் அறிக்கையை வெளியிடுவதில் இலங்கையின் முயற்சிகளை இதன்போது பாராட்டினர்.

குறிப்பாக, கொள்கை சார்ந்த விடயங்கள் மற்றும் நிதித்துறையில் ஸ்திரத்தன்மை ஆகியவை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தால் ஊக் குவிக்கப் பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூவர் (Peter Breuer) தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலப்பகுதியில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டதன்பின்னர் நடைமுறைப் படுத்தப்பட்ட கொள்கைகளின்படி இலங்கை நம்பிக்கையுடன் அரசாங்க வருமானத்தை உயர்த்தியுள்ளதாக சமீபத்திய சந்திப்பில் தெரியவந்துள்ளதாகவும், அதன் மூலம் சர்வதேச சமூகம், உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்கள் மற்றும் தனியார் கடன்வழங்குநர்களின் நம்பிக்கை அதிகரிக்க காரணமாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பணவீக்கத்தை கணிசமாகக் குறைப்பதில் இலங்கையின் வெற்றியை, பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டதாகவும், நிதியியல் கொள்கை மற்றும் செலவுகளைக் குறைக்கும் இலங்கை அரசின் கொள்கைகளே அதற்கு காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிப்பு போன்ற சாதகமான முடிவுகள் தொடர்பிலும் சர்வதேச நாணய நிதியம் அவதானித்துள்ளது.

குறிப்பாக மூலதனம் மற்றும் பொறிமுறை உருவாக்கம் மூன்றாம் காலாண்டில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்துள்ளதாகவும், தற்போதுள்ள ஆட்சிப் பொறிமுறையின் சீர்திருத்தங்களில் இது சாதகமான குறிகாட்டிகளாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

IMF அதன் வரவிருக்கும் முறையான மறு ஆய்வு மற்றும் கட்டுரை 04 ஆலோசனையைத் திட்டமிட்டுள்ள நிலையில், புதிய அரச நிதி மேலாண்மைச் சட்டம், அரச-தனியார் கூட்டிணைவு தொடர்பான சட்டத்துடன் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் சொத்து வரிவிதிப்பு ஆகியன தொடர்பில் இலங்கை கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பகுதிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், தற்போதைய சீர்திருத்தங்கள், நிதி சிக்கல்களைத் தீர்ப்பது மற்றும் நிர்வாக நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் உடனடி கவனம் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.

வங்கிச் சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் வங்கித் துறையின் மறுமூலதனமாக்கல் உள்ளிட்ட நிதி விடயங்களில் துரித கவனம் செலுத்த வேண்டிய அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

ஆட்சிப் பொறிமுறையில் கவனம் செலுத்துதல், ஊழல் தடுப்பு ஆணைக் குழுவை அமுல்படுத்துதல் மற்றும் அது தொடர்பான செயல் திட்டங்களை வெளியிடுதல் மற்றும் அதன் ஆணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புரிந்துகொள்வதற்காக அரசியலமைப்பு பேரவையுடனான சந்திப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ம-7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

காணி விற்பனைக்கு
நிலப்பரப்பு
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில்
பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன்
அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி
விற்பனைக்குண்டு. (18604)
077 077 4919

Zoom மூலமான
புலமை வகுப்பு
ஆரம்பமாகிவிட்டன
தரம் : 03, 04, 05 ஆம்
வகுப்புகளுக்கு
"வீட்டில் இருந்த படி கற்று
சிறந்த பெறுபேறு
எடுப்பதற்கான ஒருவழி" (18506)
100 வினாத்தாள்கள் வகுப்பில்
விளங்கப்படுத்தப்படும்.
077 83 43 666

துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
அவுஸ்திரேலியா விசேட சலுகை
உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18578)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-8127)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8127)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்
V2 TRAVELS


## இதய அஞ்சலி

எமது பல்கலைக்கழக வர்த்தகப் பிரிவு நண்பியும் வலிகாமம் வலய கல்வி அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தருமான திருமதி கருணாலட்சுமி ராஜ்குமார் அவர்களின் அன்புத் தாயார்



**அமரர் திருமதி நீலாம்பிகை தருமராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள் (C-8126)


கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்
புற்றுநோய் சத்திரசிகிச்சை நிபுணர்
(CONSULTANT SURGICAL ONCOLOGIST)
Dr.G.Sritharan
திங்கள்,புதன்,வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் 5.00 PM
சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் 2.00 PM
புற்றுநோய் அறுவை சிகிச்சை சேவை
முதல் 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்
புற்றுநோய் பரிசோதனை
* மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகள் மற்றும் மார்பு மீள்உருவாக்க சிகிச்சைகள்
* வாய் புற்றுநோய் பரிசோதனை
* குடல் புற்றுநோய் பரிசோதனை
* உணவுக்குழாய் மற்றும் வயிற்றுப் புற்றுநோய் பரிசோதனை
* கழுத்து புற்றுநோய் (தைரொயிட்) பரிசோதனை
* அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கான வேறு குறிப்பிட்ட பரிசோதனைகள்
(C-8123)
முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212256990

Happy Supermarket - உரும்பிராய்
உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின்
கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...


| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269 /= | Max 2Kg | |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - 165 /= | Max 5Kg | |
| 1 Kg சர்க்கரை | - 305 /= | | |
| 1 Kg அரிசி மா | - 200 /= | | |
| 1 Kg றவை | - 289 /= | | |
| 1 Kg கோதுமை மா | - 183 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 189 /= | | |
| 1 Kg சம்பா அரிசி | - 230 /= | Max 3Kg | |
| 100g கற்கண்டு | - 34 /= | | |
| 100g பிளம்ஸ் | - 125 /= | | |
| 1 மங்களம் ஊதுபத்தி | - 150 /= | ~~200 /=~~ | |
| 1 Kg Sunlight Rose பவுடர் | - 369 /= | ~~430 /=~~ | |
| 70g Baby Soap | - 112 /= | ~~145 /=~~ | |
| 180g Protinex புரோடினக்ஸ் | - 1699 /= | ~~1957 /=~~ | |
| 400g sustagen சஸ்ரயன் | - 3435 /= | ~~3900 /=~~ | |


1028/=




~~1080/-~~

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30 (18617)

காணி விற்பனைக்கு
நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில்
02 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
● பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
● திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
● குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
● நன்னீர் ஊற்று.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு : ஜெயம் (18604)
077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. ..., ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.